රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | 76/1/15/18(I) XVIII වෙළුම | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2023.11.01 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**பொது சேவை பதவிகளுக்கு நியமனம் செய்தல் / பதவி உயர்வு வழங்குதல் என்பவை தொடர்பாக சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி / தொழில் தகைமைகளுடன் தொடர்புடைய சான்றிதழ்களின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிசெய்து கொள்ளுதல்**

**(இலங்கை நிர்வாக சேவை)**

சேவைப்பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனம் செய்தல் / பதவி உயர்வுகளில் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி /தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள், குறித்த பதவியில் நிர்வாக அதிகாரத்தைக் கொண்ட அமைச்சின் செயலர்களால் மேற்படி சான்றிதழ்களை வெளிட்ட நிறுவனத்தின் மூலம் உறுதிப்படுத்திய பின்னர் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மேற்படி ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரது PSC/PRO/HB/26/2023 ஆம் இலக்கம் மற்றும் 25.08.2023 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02. இதன்படி, வருங்காலத்தில் இலங்கை நிர்வாக சேவையில் தரம் I மற்றும் விசேட தரத்தின் பதவி உயர்வுகளுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள உத்தியோகத்தர்களின் பட்டப்பின் படிப்பினை உரிய பல்கலைக்கழகங்களினால் உறுதி செய்வதற்காக, பட்டப்பின் படிப்பினை பூர்த்திசெய்த பின்னர் அதன் சான்றிதழ்களைபணிப்பாளர் (இ.நி.சே) இடம் விரைவாக அனுப்புமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக அனுப்பப்பட வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2696211-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | info@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Website | www.pubad.gov.lk |

- பட்டப்பின்படிப்பு தொடர்பான பட்டப்படிப்பு சான்றிதழ் மற்றும் விரிவான பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பினை உறுதிப்படுத்துவதற்கு அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதற்காக பல்கலைக்கழக நிர்வாகத்தை அழைத்து தயாரிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கோரிக்கைக் கடிதம்.

(கவனிக்கவும்: பல்கலைக்கழகங்களினால் பட்டப்படிப்புச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும்போது கட்டணம் ஏதேனும் அறவிடப்பட்டால் அதற்கான தொகையை எவ்வாறு செலுத்துவது என்பது குறித்து எதிர்காலத்தில் உங்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.)

03. 01.01.2024 ஆந்திகதி இலங்கை நிர்வாக சேவையின் விஷேட தரத்துக்கு மற்றும் 01.02.2024 ஆந்திகதிய இலங்கை நிர்வாக சேவையின் தரம் I க்கு பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் 2/1842 மற்றும் 23.12.2013 ஆந்திகதிய இலங்கை நிர்வாக சேவைப்பிரமாணக் குறிப்பில் முறையே 13.3.(அ) இல் பிரிவு (i) மற்றும் பிரிவு 13.2.(அ) இல் பிரிவு (i) இன் படி பட்டப்பின்படிப்பு தகைமையினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் பட்டப்படிப்புக்கு உரிய ஆவணங்களை 30.11.2023 ஆந்திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணிப்பாளர் (இ.நி.சே.)
இலங்கை நிர்வாக சேவைகள் பிரிவு
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

ஒப்பம்./ பி.டபிள்யூ. ராஜபக்ச

மேலதிக செயலாளர் (பொது நிர்வாகம்)

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பதிலாக

தொலைபேசி : 011-2698605

தொலைநகல் : 011-2683651

மின்னஞ்சல் முகவரி: pubad.dslas@gmail.com